செ.வெ.எண்:- 05/2020 நாள்:02.05.2020

**திண்டுக்கல் மாவட்டம்**

**இரத்தமுறை உறவினர் இறுதி சடங்கு நிகழ்ச்சி, அவசரகால மருத்துவ சிகிச்சை மற்றும் முன்னரே நிச்சயிக்கப்பட்டுள்ள திருமண நிகழ்ச்சி ஆகிய காரணங்களுக்காக E-pass கேட்டு விண்ணப்பம் செய்பவர்கள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள https://www.tnepass.tnega.org என்ற இணையதளத்தில் மட்டுமே விண்ணப்பிகக வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

இந்திய அரசின் ஆணைகள் மற்றும் தமிழக அரசின் வழிகாட்டுதல்களின்படி திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுப்பதற்காக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இரத்தமுறை உறவினர் இறுதி சடங்கு நிகழ்ச்சி, அவசரகால மருத்துவ சிகிச்சை மற்றும் முன்னரே நிச்சயிக்கப்பட்டுள்ள திருமண நிகழ்ச்சி ஆகிய காரணங்களுக்காக மட்டும் https:epasskki.in மற்றும் Dindigul.nic.in ஆகிய இணையதளங்கள் மூலமாக அனுமதி சீட்டு வழங்கப்பட்டு வந்தது.

தற்போது, அரசின் புதிய வழிமுறைகளின்படி, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள https://www.tnepass.tnega.org என்ற இணையதளத்தில் **03.05.2020-ஆம் தேதி முதல்** விண்ணப்பிக்கலாம். மேலும், இதுவரை விண்ணப்பம் செய்துவந்த மேற்கண்ட இரண்டு இணையதளங்களும் **(https:epasskki.in மற்றும் Dindigul.nic.in)** 03.05.2020-ம் தேதி முதல் செயல்படாது. ஆகவே, 03.05.2020-ஆம் தேதி முதல் கீழ்க்குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக E-pass கேட்டு விண்ணப்பம் செய்பவர்கள் https://www.tnepass.tnega.org என்ற இணையதளத்தில் மட்டுமே விண்ணப்பம் செய்ய வேண்டும்.

**தனிநபர் வகை (Individual Type):**

1. **திருமணம்:-**
   ஊரடங்கு தேதிக்கு முன்னதாக ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமணமாக இருக்க வேண்டும். மேலும், நெருங்கிய உறவினரின் திருமணமாக இருக்க வேண்டும். திருமண அழைப்பிதழ் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.
2. **இறுதிச் சடங்கு/இறப்பு:-**
   நெருங்கிய உறவினரின் இறப்பாக இருக்க வேண்டும். மருத்துவர் அல்லது கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று இணைக்கப்பட வேண்டும்.
3. **ஆவசரகால மருத்துவ சிகிச்சைகள்:-**
   சிகிச்சை பெறும் நபருடன் உதவிக்கு ஒருநபர் மட்டும் செல்லலாம். சமீபத்தில் பெறப்பட்ட மருத்துவச் சான்று இணைக்கப்பட வேண்டும்.

**தொழில் வகை: (Industry Type):**

1. சிறு, குறு மற்றும் நடுத்தரம் (கிராமப்பகுதி மற்றும் பேரூராட்சி பகுதி)
   MSME (Village and Town Panchayats)
2. சிறு, குறு மற்றும் நடுத்தரம் (நகராட்சி பகுதி மற்றும் மாநகராட்சி பகுதி)
   MSME (Corporation and Municipalities)
3. பெரிய அளவிலான தொழில்கள் (கிராமப்பகுதி மற்றும் பேரூராட்சி பகுதி)
   Large Industry (Village and Town Panchayats)

4. பெரிய அளவிலான தொழில்கள் (நகராட்சி பகுதி மற்றும் மாநகராட்சி பகுதி)
   Large Industry (Corporation and Municipalities)
5. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் (கிராமப் பகுதி மற்றும் பேரூராட்சி பகுதி)
   IT & ITES (Village and Town Panchayats)
6. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் (நகராட்சி பகுதி மற்றும் மாநகராட்சி பகுதி)
   IT & ITES (Corporation and Municipalities)
7. தளவாடங்கள் மற்றும் சேமிப்புகிட்டங்கி
   Logistics and Warehousing
8. மற்றவை(அனைத்து பணியமைப்புகள், கடைகள், நிறுவனங்கள், கட்டுமானங்கள்) - கிராமம் மற்றும் பேரூராட்சி பகுதிகள்
   Others (All establishments / Shops/ Organizations/ Constructions) in Village and Town Panchayats)
9. மற்றவை (அனைத்துபணியமைப்புகள் ∴ கடைகள் ∴ நிறுவனங்கள் ∴ கட்டுமானங்கள்) —— நகராட்சிமற்றும் மாநகராட்சிபகுதிகள்
   Others (All establishments/ Shops/ Organizations/ Constructions) in Corporation and Municipalities)

மேலும், 03.05.2020 தேதி முதல் https://www.tnepass.tnega.orgஎன்ற இணையதளம் வாயிலாக திண்டுக்கல் மாவட்டத்திற்குள்ளாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு செல்பவர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்தினாலும், திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கு செல்பவர்களுக்கு சென்னை மாநில கட்டுப்பாட்டு மையம் மூலமாகவும் அனுமதிச்சீட்டு வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**